முச்சந்தி முரளி



"அரசியல்வாதியள் எல்லாரும் லெக்சன் முடிய கூடிடுவினம், அப்பாவி மக்கள் தான் பிரிஞ்சிடுவினம்"

Registered as a Newspaper

பக்கங்கள் - 12
விலை - ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 323

திங்கட்கிழமை
14 ஒக்ரோபர் 2024

புரட்டாதி 28 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

# யாழ்., கிளிநொச்சி மாவட்டங்களில் புதிதாக 26 மதுபானசாலைகள்

## அவற்றில் 18 க்கே அனுமதியும்

## மக்கள் எதிர்ப்பால் ஏனையவற்றின் அனுமதிகள் தாமதம்

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 14

**யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் மாத்திரம் புதிதாக மதுபானசாலைகள் அமைப்பதற்கு 26 அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளன. கிளிநொச்சி மாவட்டத்தில் 18 க்கும் யாழ்ப்பாண மாவட்டத்தில் 8 க்கும் அனுமதிகள் கிடைக்கப்பெற்றுள்ளன. இவற்றில் கிளிநொச்சியில் 17 க்கும், யாழ்ப்பாணத்தில் ஒன்றுக்கும் மட்டுமே பிரதேச செயலர்கள் அனுமதி வழங்கியுள்ளனர்.**

11

## இன்று முதல் வெள்ளிவரை இடையிடையே மழை தொடரும்

யாழ்ப்பாணம், ஒக். 14

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் இன்று அதிகாலை முதல் கன மழை கிடைக்கும். இது இடையிடையே இடி மின்னலோடு கூடிய மழையாக இருக்கும். இந்த மழை

11

## சீரற்ற காலநிலையால் ஒரு லட்சம் பேர் பாதிப்பு

### இருவர் உயிரிழப்பு

கொழும்பு, ஒக். 14

கொழும்பு, கம்பஹா உட்பட நாட்டில் 13 மாவட்டங்களில் நிலவும் சீரற்ற காலநிலையால் 30 ஆயிரத்து 17 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு இலட்சத்து 18 ஆயிரத்து 210 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

11

## வெளிநாட்டு மோகத்தால் கோடிகளை இழந்த மக்கள்

### வடக்கு - கிழக்கே முதலிடம்

கொழும்பு, ஒக். 14

வெளிநாட்டு ஆசை காரணமாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த மக்கள் கோடிக்கணக்கான பணத்தை மோசடிக்கார முகவர்களிடம்

11

## மர்மப்பொருள் வெடித்து இளைஞன் படுகாயம்

கிளிநொச்சி, ஒக். 14

பளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அரசர்கேணியில் நேற்றுக்காலை மண்ணுக்குள் புதையுண்டிருந்த மர்மப்பொருள் வெடித்ததில் 19 வயதான இளைஞரொருவர் காயமடைந்துள்ளார்.

11



## டெங்குநோய் கட்டுப்பாட்டில் ஆயினும் அவதானம் தேவை

### சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 14

யாழ். மாவட்டத்தில் கடந்த 5 ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டு டெங்கு நோய் கட்டுப்பாட்டுக்குள் இருக்கின்றது. ஆனாலும் பருவமழை ஆரம்பித்துள்ளமையால் டெங்கு நோயின் தாக்கம் அதிகரிக்கக்கூடிய அபாயம் இருப்பதாக யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி ஆ. கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

11



## ஹிருணிகாவும் பதவி விலகல்

### நெருக்கடியில் சஜித்

கொழும்பு, ஒக். 14

ஐக்கிய மக்கள் சக்தியின் மகளிர் தேசிய அமைப்பாளர் பதவியில்

11

## எரிபொருளுக்கான கொள்வனவு மோசடியால் மின்கட்டணம் உயர்வு!

### அம்பலமானது உண்மை

கொழும்பு, ஒக். 14

2023 ஆம் ஆண்டு களனி திஸ்ஸவிலுள்ள எரிபொருள் மூலம் மின் உற்பத்தி செய்யும் நிலையத்துக்கு எரிபொருள் கொள்வனவு செய்வதற்குக் கூடுதல் பணம் செலவிடப்பட்டமை தற்போது தெரிய வந்துள்ளது.

கடந்த ஆண்டு உலக சந்தையில் நப்தா ஓயில் 110 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டபோது

11

## ஒதுங்கும் அரசியல்வாதிகள்: மக்கள் எதிர்பார்த்த மாற்றம்

### விமர்சனங்கள் தவிடுபொடி

### ஜனாதிபதி அநுரகுமார தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 14

இலங்கை அரசியலில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தால் அரசியல்வாதிகளின் 'ஓய்வு' என்ற வார்த்தையை அறிமுகப்படுத்த முடிந்துள்ளது.

கடந்த காலங்களில் தேர்தலில் தோல்வியடைந்த அல்லது உயிரிழந்த அரசியல்வாதிகளைத் தவிர பிறர் எவரும் ஓய்வு பெறவில்லை என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

11



## வடக்கு அரசியல் கட்சிகள் அரசுடன் இணையத் தயார்!

### ஜனாதிபதி அநுர தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 14

நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் வடக்கில் உள்ள அரசியல் கட்சிகள் அரசாங்கத்துடன் இணைந்து செயற்படத் தயாராக இருக்கின்றார்கள் என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# ஓய்வுபெற்ற எம்.பி.க்களுக்கு 33 கோடி ரூபா செலவழிப்பு

கொழும்பு, ஒக்.14

**தற்போது நாடாளுமன்றத்தில் இருந்து ஓய்வுபெற்ற மற்றும் உயிரிழந்த உறுப்பினர்களின் உறவினர்களுக்காக 33 கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளது.**

நாடாளுமன்றத்தில் இருந்து பெறப்பட்ட சமீபத்திய அறிக்கைகளின்படி இந்த விடயம் தெரியவந்துள்ளது. அதற்கமைய, 424 பேருக்கான ஓய்வூதியம் செலுத்துவதற்காக இந்த வருடத்துக்கான வரவு - செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த எண்ணிக்கையில் சமீபத்தில் கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தின் முன்னாள் உறுப்பினர்கள் இணைக்கப்படவில்லை.

குறைந்தபட்சம் 5 வருட சேவையை பூர்த்தி செய்த ஒரு உறுப்பினருக்கு அனைத்துக் கொடுப்பனவுகளுடன் மாதம் 57,620 ரூபா ஓய்வூதியம் வழங்கப்படும்.

நாடாளுமன்றத்தில் 15 ஆண்டுகள் அல்லது அதற்கு மேல் இருந்த உறுப்பினருக்கு அனைத்து கொடுப்பனவுகளுடன் வழங்கப்படும் மாதாந்த ஓய்வூதியம் 75 ஆயிரத்து 715 ரூபாவாகும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-இ)



# ரணிலின் திட்டங்களே அநுரவால் நடைமுறை

கொழும்பு, ஒக்.14

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வேலைத்திட்டங்களையே முன்னெடுத்துச் செல்கின்றார் என நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் நிமால் லான்சா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ரணிலின் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக அநுர ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படவில்லை. அவர் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றவேண்டும்.

அவர்களால் புதிய வேலைத்திட்டங்களை முன்னெடுக்கமுடியவில்லை என்றால், நாம் ஆரம்பித்தவற்றை நாமே நிறைவு செய்வோமல்லவா? அந்தவகையில் பொதுத்தேர்தலில் மக்கள் எமக்கு வாக்களிப்பதே பொருத்தமானது. நாடளாவிய ரீதியில் சிலிண்டர் சின்னத்தில் பலமான ஓர் அணியைக் களமிறக்கியிருக்கின்றோம்.

கோத்தாபய ராஜபக்சவுக்கு மூன்றில் இரண்டை வழங்கியதால் நாடு எவ்வாறான அழிவுகளைச் சந்தித்தது என்பதை மக்கள் மறந்திருக்க மாட்டார்கள் - என்றார். (ச)

# சஜித் அணிக்குள் உள்ளகப் பூசல்கள்

## முஜிபுர் ரஹ்மான் ஆதங்கம்

கொழும்பு, ஒக்.14

ஐக்கிய மக்கள் சக்திக்குள் உள்ளக முரண்பாடுகள் பூதாகரமாகி யுள்ளதாக கட்சி வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அஜித் மானப்பெருமவின் தொகுதி அமைப்பாளர் பதவி நீக்கப்பட்டுள் ளது. தமிதா அபேரத்னவின் பெயர் இறுதி நேரத்தில் நீக்கப்பட்டுள் ளது. இது நியாயமற்றது என நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

அஜித் மானப்பெரும விவகாரம் கட்சியின் உள்ளகப் பிரச்சினை யாகும். அவரது தொகுதி அமைப்பாளர் பதவி எதற்காகப் பறிக்கப்பட்டது என்பது தெரியவில்லை. இதுதொடர்பில் கட்சித் தலைவர் மற்றும் செயலாளரின் நிலைப்பாட்டைக் கோரவேண்டும்.

தமிதா அபேரத்னவுக்கு வேட்புமனு இடமளிக்குமாறு கட்சி தீர்மானித்திருந்த நிலையில், இறுதிக் கட்டத்தில் எதற்காக அந்தத் தீர்மானம் மாற்றப்பட்டது என்பதும் எனக்குத் தெரியாது.

எனினும், இது அநீதியாகும் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். தயாசிறி ஜயசேகரவின் பெயர் குருநாகல் வேட்புமனு பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதும் தெரியாது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ச-இ)

# மரண அறிவித்தல்



தோற்றம் 06.02.1943

மறைவு 13.10.2024

## அப்புத்துரை கண்ணகையம்மா

யாழ்ப்பாணம், பண்ணாகத்தை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட அப்புத்துரை கண்ணகையம்மா நேற்று (13.10.2024) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் அமரர்களான பொன்னுச்சாமி - நல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், அமரர்களான இராமலிங்கம் - மாரிமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும், அமரர் அப்புத்துரையின் (இளைப்பாறிய பிரதம லிகிதர், சுகாதார திணைக்களம்) அன்பு மனைவியும், அமரர்களான தர்மலிங்கம், பத்மாவதி, பரமேஸ்வரி, நாகலிங்கம் மற்றும் யோகம்மா, சரஸ்வதி, நவமலர் ஆகியோரின் அன்புச் சகோதரியும், அமரர்களான ஆதிலட்சுமி, பொன்னம்பலம், முருகையா, திருமகள், மகாதேவன், தெட்சணாமூர்த்தி, எதிர்நாயகம், குமாரசாமி, சிவபாக்கியம் மற்றும் பாலபாஸ்கரன், உமாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனியும், ரதி, அமரர் தயாபரி மற்றும் வனிதா (கனடா), நிமலநாதன் (லண்டன்), நளினி, சத்யா (அபிவிருத்தி உத்தியோகத்தர், வலி மேற்கு பிரதேச சபை உப அலுவலகம், சுழிபுரம்), இராமலிங்கம் (மருத்துவ பௌதிகவியலாளர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம், புற்றுநோய் பிரிவு, தெல்லிப்பளை) ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜெயரத்தினம், ஸ்ரீகணேசமூர்த்தி (டென்மார்க்), கேதீஸ்வரன் (கனடா), மைதிலி (லண்டன்), சிவரூபன் (கணித ஆசிரியர்), பகீரதன் (ஆசிரியர் யாழ். புனித ஹென்றி அரசர் கல்லூரி), கலையரசி (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர், நல்லூர் பிரதேச சபை) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், கௌசல்யா (கண்தொழில் நுட்பவியலாளர் போதனா வைத்திய சாலை யாழ்ப்பாணம்), நிறோஜன் (விவசாய போதனா சிரியர்), துவாரகன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர், இமல்ஸ்ரா கம்பனி), பவதாரணி, நரேன்(டெனமார்க்), திகான் (டெனமார்க்), லோகினி (கனடா), கோபிகா (கனடா), மதுரா (லண்டன்), நிதுமிதன் (லண்டன்), சிவானுஜன் (முகாமைத்துவ பீடம், யாழ். பல்கலைக்கழகம்), சரண்ராஜ், கஜானன், சுபஸ்திகன், சுபாங்கன், பிரசாந்தினி, நானிலன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.10.2024) திங்கட்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பண்ணாகம், சுழிபுரம்,
T.P:077 9790 867

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிக்ஸ் அமைப்பில் இணையும் இலங்கை

கொழும்பு, ஒக்.14

**ரஷ்யாவில் நடைபெறவுள்ள பிரிக்ஸ் மாநாட்டில் கலந்துகொள்வதற்காக வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஹருணி விஜேவர்த்தன தலைமையிலான குழு எதிர்வரும் 20ஆம் திகதி கசான் நகருக்குச் செல்லவுள்ளது.**

இந்தப் பயணத்தின் மூலம் பிரிக்ஸ் பொருளாதார கூட்டமைப்பில் இலங்கையின் உறுப்புரிமை தொடரப்படும் என வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. சீனா, இந்தியா மற்றும் பிரேசில் போன்ற முக்கியமான உலகப் பொருளாதாரங்களை உள்ளடக்கிய அமைப்பில் இணைவதற்கான நடவடிக்கைக்கு ஒப்புதல் அளித்திருந்த ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்தின் தீர்மானத்தின் பிரகாரம் பிரிக்ஸ் அமைப்பில் இணையும் விருப்பத்தை ஜனாதிபதி அநுரவும் இதன்போது வெளிப்படுத்தியிருந்தார்.

இதற்கமைவாகவே இலங்கை பிரதிநிதிகள் குழு ரஷ்யா செல்கிறது. பிரிக்ஸ் அமைப்பினை மேலும் விரிவுபடுத்தும் நோக்கில் புதிய உறுப்பினர்களாக இலங்கை, ஈரான், எகிப்து, எத்தியோப்பியா மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆகிய நாடுகளை இவ்வாண்டில் இணைத்துக்கொள்வதற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## சீரற்ற காலநிலையால் 6,018 குடும்பங்கள் பாதிப்பு

கொழும்பு, ஒக்.14

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக 11 மாவட்டங்களில் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண்சரிவால் 6,018 குடும்பங்களைச் சேர்ந்த 24 ஆயிரத்து 492 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

23 நிவாரண மையங்களில், 584 குடும்பங்களைச் சேர்ந்த 2,200 பேர் தற்போது பாதுகாப்பாக தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

அவசரகால நிலைமைகள் பற்றிய தகவல்களை, அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் 117 அழைப்பு நிலையம் மற்றும் 0112136136, 0112136222, 0112670002 என்ற தொலைபேசி இலக்கங்கள் மூலம் தெரிவிக்கலாம் என்றும் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது (ச-இ)

## சுற்றுலாவிகள் படையெடுப்பு

கொழும்பு, ஒக்.14

இந்த மாதத்தின் கடந்த 9 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் 36,877 சுற்றுலாப்பயணிகள் நாட்டுக்கு வருகைதந்துள்ளனர் என சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இதன்படி, இந்தியாவிலிருந்து 10,857 பேரும் சீனாவிலிருந்து 3,105 பேரும், ஜேர்மனியிலிருந்து 2,425 பேரும் நாட்டுக்கு பிரவேசித்துள்ளனர்.

அதேநேரம், இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் 15 இலட்சத்து 21 ஆயிரத்து 685 சுற்றுலாப்பயணிகள் நாட்டுக்கு வருகைதந்துள்ளனர். (ச)

## இஸ்ரேலின் தாக்குதலில் இலங்கையர்கள் காயம்



லெபனானில் இரு இலங்கையர்கள் காயமடைந்தமை தொடர்பில் முழுமையான விசாரணைகளை மேற்கொள்வதாக இஸ்ரேலிய வெளிவிவகார அமைச்சு உறுதியளித்துள்ளதாக டெல் அவிவில் உள்ள இலங்கைத் தூதரகத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தெற்கு லெபனானில் ஐக்கிய நாடுகளின் இடைக்காலப் படையில் பணியாற்றும் இரு இலங்கை அமைதி காக்கும் படையினர் இஸ்ரேலிய பீரங்கித் தாக்குதலில் காயமடைந்தமை தொடர்பில் இஸ்ரேலிய வெளிவிவகார அமைச்சின் ஆசிய பசுபிக் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் தூதர் ஹகாய் டிகான் கவலை தெரிவித்துள்ளார். இஸ்ரேலிய அரசாங்கம் சம்பவம் குறித்து முழுமையான விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும், அது கிடைக்கப்பெறும் போது மேலதிக தகவல்களை வழங்குவதாகவும் வலியுறுத்தியுள்ளார். (ஒ-இ)

## சிறுவர் சித்திரவதை காப்பாளர் கைது

கொழும்பு, ஒக்.14

அநுராதபுரத்தில் விசேட தேவையுடையோர் பாடசாலையின் விடுதியில் வசிக்கும் சிறுவர்களை சித்திரவதை செய்ததாக கூறப்படும் விடுதியின் காப்பாளர் அநுராதபுரம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

தாக்குதலுக்கு உள்ளான சிறுவர்கள் சட்ட மருத்துவரிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ச)

## கைதான இந்திய மீனவர்கள் தண்டப்பணத்துடன் விடுவிப்பு

மன்னார், ஒக். 14

இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடித்த நிலையில் கைதுசெய்யப்பட்ட 17 இந்திய மீனவர்களையும் தலா 50 ஆயிரம் ரூபா தண்டப்பணத்துடன் விடுவிக்க மன்னார் நீதிவான் கடந்த வியாழக்கிழமை உத்தரவிட்டுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது இரண்டு இந்திய இழுவைப் படகுகளும் அதிலிருந்த 17 இந்திய மீனவர்களும் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, கைதுசெய்யப்பட்ட மீனவர்களுக்கு 2 வருட சிறைத் தண்டனை 20 வருடங்களுக்கு ஒத்திவைத்துள்ளதுடன் தலா 50 ஆயிரம் ரூபா தண்டப் பணம் விதித்து விடுதலை செய்யப்பட்டனர். (ஓ-56)

## தினம் தெரியுமோ?



**முந்தநாள் வல்லைப்பாலத்தில அநியாயமா ஒரு உயிர் பறிபோயிருக்கு. தன்ர பிள்ளைக்கு ஏடு துடக்கின சந்தோசத்தோட ஒப்பீஸ்"க்கு போய்க் கொண்டிருந்தவர் கண்ணுக்கு முன்னால வந்த பட்டா வாகனம் சறுக்கிக் கொண்டு வந்து தன்னோட மோதும் எண்டு அவர் கனவிலையாவது நினைச்சிருப்பாரோ? அந்த அக்சிடெண்டை நேரில பார்த்தவை சொல்லுறதை வைச்சுப் பார்த்தால், பட்டா வாகனத்திலையும் பெரும் பிழை மாதிரித் தெரியேலை. பைக்கில போனவரும் தன்ர பக்கத்தில ஒழுங்காத்தான் போயிருக்கிறார். அப்ப ஆரில பிழை?**

**பைக்கில வந்தவரை மோதின பட்டா வாகனத்துக்கு வாயிருந்தால் 'உன்னைச் சொல்லிக் குற்றமில்லை, என்னைச் சொல்லிக் குற்றமில்லை, பாலம் செய்த கோலமடி, ஆர்.டி.ஏ செய்த குற்றமடி' எண்டு பாட்டாவே பாடியிருக்கும். உண்மையில உந்த அக்சிடெண்டுக்கு முழுமுதல் காரணம் வழுக்கிற வல்லைப்பாலமும், அதைக் கண்டும் காணாமல் இருக்கிற ஆர்.டி.ஏ. எண்டுற வீதி அபிவிருத்தி அதிகாரசபையும் தான். எப்பவுமே உலோகப் பாலங்கள் வழுக்கிற தன்மையோட தான் இருக்கும். மழைத் தண்ணி பட்டால் இந்த வழுக்கல் இன்னும் கூடிடும். அந்த நேரத்தில வாகனங்கள் ஸ்பீடா வந்தாலோ இல்லாட்டி பாலத்தடியில ஸ்பீடா பிரேக் அடிச்சாலோ ஒரு உலுப்பு உலுப்பி விழுத்தியும் போடும். அடிக்கடி உந்த வல்லைப்பாலத்தில மழை காலத்திலையும், பனி காலத்திலையும் சறுக்குப் பட்டு கனவாகனங்கள் தொண்டைமனாத்துக்கை அப்பிடியே கவிண்டு நீந்துற சம்பவங்களையும் கேள்விப்பட்டிருப்பியள்.**

**அவ்வளவு ஏன், முந்தநாளையான் அக்சிடெண்ட் நடக்க முதல், மூண்டு நாளில மட்டும் 7 வாகனங்கள் அந்தப் பாலத்தில அடிபட்டு, கவிண்டு விழுந்த சம்பவமெல்லாம் நடந்திருக்கு. ஒவ்வொரு வருசமும் அந்தப் பாலத்தில வாகனங்கள் வகைதொகையா வழுக்கி விழேக்கையெல்லாம், உலோகப் பாலத்துக்கு மேல தார் எண்டாலும் ஊத்துங்கோ எண்டு சனம் கோரிக்கை விட்டாலும், அதை ஒரு விசயமாவே ஆர்.டி.ஏ.காரர் கண்டு கொள்ளுறேலை. பூநகரிக்கும் பரந்தனுக்கும் இடைப்பட்ட பாலங்கள் , பூநகரிக்கும் மன்னாருக்கும் இடைப்பட்ட பாலங்கள் எல்லாம் இப்பிடி உலோகப்பாலம் எண்டாலும் அதுக்கு மேல தார் போட்டிருக்கு.அதால வல்லைப் பாலம் மாதிரி அடிக்கடி ஆக்களும், வாகனங்களும் விழுந்தெழும்பிறது சரியான குறைவு. அப்பிடி வல்லைப் பாலத்துக்கும் போட்டிருந்தால், முந்தநாள் அந்த உயிர் அநியாயமாப் போயிருக்காதே. இனியாவது ஆர்.டி.ஏ.காரர் அந்தப் பாலத்துக்கு தார் போடுவினமா? இல்லாட்டி இன்னும் கொஞ்சம் உயிர் போகோணும் எண்டு வெயிட் பண்ணுவினமோ?**



-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் மருத்துவமனையில் எலும்பியல் சிகிச்சை விடுதிகள்



## புதிதாகத் திறந்துவைப்பு

யாழ்ப்பாணம், ஒக்.14
அதிகரித்துவரும் வீதி விபத்துகள் மற்றும் ஏனைய திடீர் விபத்துகளால் பாதிக்கப்படும் நோயாளிகளுக்கு உயர்தரமானதும் பாதுகாப்பானதுமான சத்திர சிகிச்சை சேவைகளை வழங்கும் நோக்கில் மன்னார் மாவட்டப் பொது மருத்துவமனையில் புதிய எலும்பியல் துறை சத்திரசிகிச்சை ஆண், பெண் விடுதிகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை திறந்துவைக்கப்பட்டுள்ளன.

மன்னார் மாவட்டத்தின் மிக நீண்டகால தேவையாகவிருந்த இந்த விசேட விடுதிகளை மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவர் அஸாத் ஹனிபா திறந்து வைத்தார். நிகழ்வில் எலும்பியல் சத்திர சிகிச்சை விசேட நிபுணர்கள் மருத்துவர் பி. திலீபன், மருத்துவர் ஆர்.எம்.எம். தீபன், விசேட மருத்துவ நிபுணர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர். (ச-56)

## கந்தபுராண விழா முதல்நாள் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக் 14
வடமராட்சி மண்ணில் மாபெரும் கந்தபுராண விழா முதல்நாள் நிகழ்வு நாளை மறுதினம் 16ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு மேலைப்புலோலி மாயக்கை சித்திவிநாயகர் ஆலயத்தில் நடைபெறவுள்ளது. நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக் கல்வி அலுவலக ஓய்வுநிலைப் பணிப்பாளர் சி.நந்தகுமார் கலந்துகொள்ளவுள்ளார். (ச)

# சிவபூஜா மாநாடும் நூல் வெளியீடும்

யாழ்ப்பாணம், ஒக் 14
இந்துசமயப் பேரவை நடத்தும் சிவபூஜா மாநாடும் இந்துசமயப்பேரவையின்தலைவர்ஈசானசிவசக்திகிரீவனின் ' சிவபூஜாத் திறவுகோல்' எனும் நூல் வெளியீடும் நாளை செவ்வாய்க்கிழமை மாலை 4 மணியளவில் கந்தர்மடத்தில் அமைந்துள்ள இந்துசமயப் பேரவையின் நடராஜர் மண்டபத்தில் சிவஸ்ரீ பஞ்சாட்சர்மா சிவானந்தசர்மா தலைமையில் இடம்பெறவுள்ளது.
நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உயர்பட்டப் படிப்புக்கள் பீடாதிபதி சிரேஷ்ட பேராசிரியர் திருநாவுக்கரசு வேல்நம்பி வாழ்த்துரையையும், இணுவில் திருப்பதி ஆலயப் பிரதமகுரு சிவஸ்ரீ சோ.பிரசன்னாக் குருக்கள் நூலின் வெளியீட்டுரையையும் ஆற்றவுள்ளனர்.
தொடர்ந்து சான்றோர்கள் மற்றும் வர்த்தகப் பெருமக்கள் விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர். (ச-66)

## முழுநிலா கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஒக்.14
உரும்பிராய் ஞானவைரவர் கோவிலடி சன சமூக நிலையம் நடத்தும் முழுநிலா நாள் கருத்தரங்கு எதிர்வரும் 17 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெறவுள்ளது. நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சிரேஷ்ட உதவி விரிவுரையாளர் இரத்தினகுமார் குபேசன் 'வாசிப்புக் கலாசாரமும் சமூக மேம்பாடும்' எனும் தலைப்பில் கருத்துரை வழங்குவார். (ச-45)



# மாணவர்களுக்கு கற்றல் கையேடு

யாழ்ப்பாணம்,ஒக். 14
கல்விக்குக் கரம் கொடுக்கும் வெண்கரம் அமைப்பால் க. பொ.த. சாதாரண தர மாணவர்களுக்கான செயன்முறை கையேடுகள் 'முயன்று தவறிக் கற்றல்' எனும் தொனிப்பொருளில் வெண்கரம் அமைப்பின் ஆசிரிய வளவாளர்களால் தயாரிக்கப்பட்டு பரீட்சை பிரிவினரால் வெளியிடப்பட்டுள்ளது.
கணிதம், தமிழ், வரலாறு, சமயம் ஆகிய பாடங்களுக்கான இந்தச் செயன்முறைக் கையேடுகள் வலிகாமம், யாழ்ப்பாணம் கல்வி வலயங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டது. (ச- 27)



பளுதூக்கல் போட்டி,

# மூன்று பதக்கங்கள் வென்றார் புசாந்தன்

யாழ்ப்பாணம், ஒக்.14
தென்னாப்பிரிக்காவில் நடைபெற்ற பொதுநலவாய நாடுகளுக்கு இடையிலான பளுதூக்கல் போட்டிகளில், யாழ். சாவகச்சேரியைச் சேர்ந்த சற்குணராசா புசாந்தன் 3 பதக்கங்களைப் பெற்றுள்ளார்.
120 கிலோ எடைப் பிரிவில் டெட் லிப்ட் போட்டியில் தங்கப் பதக்கத்தையும்,பென்ஞ் பிரஸ் போட்டியில் வெள்ளிப் பதக்கத்தையும், குவாட்ஸ் போட்டியில் வெண்கலப் பதக்கத்தையும் பெற்று இலங்கைக்குப் பெருமை சேர்த்துள்ளார். (ச-25, 27)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். மனஉறுதியுடன் முடிவெடுத்து செயற்படுவீர்கள். திடீர் பணவரவு மகிழ்ச்சி தரும். செலவுகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. மனஸ்தாபம் நீங்கும்.

**இடபம்:** வழக்கமான பணிகளில் மட்டுமே ஈடுபடவும். சிலருக்கு திடீர்ப் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. தொல்லைகள் நீங்கும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மகாலட்சுமியை வழிபட நன்மைகள் அதிகரிக்கும்.

**மிதுனம்:** திடீர்ச் செலவுகள் ஏற்படக்கூடும். புதிய முயற்சி அனுகூலமாக முடியும். செலவுகள் ஏற்படக்கூடும். வியாபாரத்தில் விற்பனை எதிர்பார்த்ததைவிடவும் குறைவாகத்தான் இருக்கும். விநாயகரை வழிபடுவது நலம் சேர்க்கும்.

**கடகம்:** காரியம் இழுபறியாக முடியும். காரியங்களில் வெற்றியும் உண்டாகும். உடல் அசதி உண்டாகும். விற்பனை விறுவிறுப்பாக நடைபெறுவதுடன் இலாபமும் கூடுதலாகக் கிடைக்கும். முருகப்பெருமானை வழிபடுவது நன்று.

**சிம்மம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவும். புதிய முயற்சியைக் கண்டிப்பாகத் தவிர்க்கவும். மற்றவர்களுடன் பேசும்போது வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். வார்த்தைகளில் நிதானம் அவசியம். உடல் ஆரோக்கியத்தில் அக்கறை அவசியம்.

**கன்னி:** புதிய முயற்சி சாதகமாக முடியும். எதிர்பார்த்த காரியம் சாதகமாக முடிந்துவிடும். மனதில் அவ்வப்போது குழப்பம் ஏற்பட்டு நீங்கும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**துலாம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. ஆதாயம் உண்டாகும். செலவு செய்ய வேண்டி வரும். சங்கடங்கள் ஏற்பட்டாலும் பாதிப்பு எதுவும் இருக்காது. எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் விலகும். துணிச்சலாக முடிவெடுப்பீர்கள்.

**விருச்சிகம்:** இன்று புதிய முயற்சி எதையும் மேற்கொள்ளவேண்டாம். உறவுகளுக்காக செலவு செய்ய வேண்டி வரும். மனதில் இனம் தெரியாத குழப்பம் ஏற்பட்டு நீங்கும். பொறுமையைக் கடைப்பிடிப்பது அவசியம்.

**தனுசு:** மனதில் உற்சாகமும், செயல்களில் பரபரப்பும் காணப்படும். உங்கள் யோசனையை வாழ்க்கைத்துணை ஏற்றுக்கொள்வார். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. தேவையற்ற செலவுகள் ஏற்படக்கூடும்.

**மகரம்:** புதிய முயற்சி சாதகமாக முடியும். காரிய அனுகூலம் உண்டாகும். ஆரோக்கியத்தில் சற்று கவனம் தேவைப்படும். செலவுகளால் கடன் வாங்கவேண்டிய சூழ்நிலை ஏற்படும். சில சங்கடங்களும் ஏற்படக்கூடும்.

**கும்பம்:** தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. செலவுகள் அதிகரித்தாலும் சமாளித்துவிடுவீர்கள். உறவினர்களால் மகிழ்ச்சி ஏற்படும். சுபநிகழ்ச்சிக்கான பேச்சு இழுபறியானாலும் சாதகமாக முடியும்.

**மீனம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். துணிச்சலாகச் செயற்படுவீர்கள். புதிய முயற்சி சாதகமாக முடியும். குடும்ப உறுப்பினர்களின் தேவைகளை நிறைவேற்றும் வகையில் சற்று அலைச்சலும் சோர்வும் உண்டாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# இறையே தவறுடையான்!

இலங்கையில் நாளொன்றுக்கு 8 பேர் வீதம் உயிர்மாய்த்துக்கொள்வதாக தரவுகள் வெளியாகியுள்ளன. இதில் ஆச்சரியப்படுவதற்கு எதுவுமில்லை. இந்த உயிர்மாய்ப்புகளுக்கு மறைமுகமாக அரசாள்வோரும் காரணமே. நாட்டில் கடந்த சில தசாப்தங்களாக நிலவும் புறக்காரணிகள் உளவியல் ரீதியான நெருக்கீடுகளை அதிகரித்துச் செல்கின்றனவே தவிர மனதுக்கு ஒத்தடம் கொடுப்பவையாக இருக்கவில்லை. 2009 ஆம் ஆண்டுக்கு முன்னர் வரை இலங்கை உருப்படாமல் இருப்பதற்கு உள்நாட்டுப்போரே காரணமென்று சொல்லப்பட்டது. இதனால் போர் முடிவுக்கு வந்த பின்னர் நாட்டில் பாலாறும் தேனாறும் ஓடும், மாதம் மும்மாரி பொழியும், எல்லா வீடுகளிலும் எல்லாநாளும் தீபாவளி போல மகிழ்ச்சிக்கடல் பெருகும் என்றே அநேக இலங்கையர்கள் நம்பினர். ஆனால் நடந்ததோ நேர்மாறு.

போரை வென்று கொடுத்தோம் என்று மார்தட்டிக்கொண்டு மஹிந்த அண்ட் கோ இந்த நாட்டின் அத்தனை வளங்களையும் உறிஞ்சி, அதன் வருவாயை தமது பொக்கற்றில் போட்டுக்கொண்டது. அதன் பின்னர் அரியணை ஏறிய, மைத்திரி - ரணில் கூட்டாவது கொஞ்சமேனும் மக்களுக்கான ஆட்சியை நடத்தும் என நினைத்தால், ரணில் தன் கூட்டாளிகளோடு இன்னும் ஒரு படிமேலே போய் மத்திய வங்கியையே வழித்துத் துடைத்தார். மறுமுனையில் மைத்திரி எந்தவொரு ஜனநாயக நாட்டிலும் நடந்திராத அரசியல் கோமாளித்தனங்களையெல்லாம் அரங்கேற்றி மக்களைக் கடுப்பேற்றினார். போதாக்குறைக்கு ஈஸ்டர் தாக்குதலை நடத்த விடுமளவுக்கு பாதுகாப்பில் கடும் அலட்சியம். இதைச் சாக்காக வைத்து மீண்டும் ஆட்சிக்கு வந்த ராஜபக்சக்கள், இம்முறை கோத்தாபயவின் தலைமையில் எடுத்த முடிவுகளெல்லாம் மைத்திரியின் கூத்துகளை விடவும் நகைப்புக்கிடமானவை. கூடவே கொரோனாவும் சேர்ந்து கொள்ள, பொருளாதார நெருக்கடி சூழ்ந்ததால், பொறுத்தது போதுமென மக்கள் பொங்கினர். கோத்தாபய நாட்டை விட்டே ஓடினார். ஆனால் அதே பழைய பெரமுன அரசாங்கம் என்ற கள்ளை ரணில் என்ற புதிய மொந்தைக்கு மாற்றிவிட்டு, எல்லாமே புதிது என்று பித்தலாட்டம் போட்டார்கள். உலக நாடுகளிடம், சர்வதேச நாணயநிதியத்திடமும் கடன் வாங்கி நாட்டை நடத்திக் கொண்டு, பொருளாதாரத்தில் நாடு முன்னேறிவிட்டதாக பீற்றியது ரணில் அரசாங்கம். இப்போது மாற்றம் என்ற கோஷத்தோடு அநுர ஆட்சிப்பீடம் ஏறியிருக்கிறார். அவரும் அதைச் செய்வேன், இதைச் செய்வேன் என்கிறாரே தவிர பெரிதாகச் சொல்லுக்கேற்றளவு செயலைக் காட்டவில்லை. அநுர வந்தவுடன் அதிரடியாகக் குறைந்த முட்டைவிலை கூட இப்போது மீண்டும் பழையபடி உயரத் தொடங்கிவிட்டது.

இப்படி அரசியல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும், வாழ்க்கைச்சுமை அழுத்தத்தாலும், விலைவாசி ஏற்றத்தாலும் நொந்து நூலான மக்கள் எங்கு போய் தம் உளவலியை ஆற்றமுடியும். இந்தப் புறக்காரணிகள் மெல்ல மெல்ல ஒவ்வொரு குடும்பத்தினதும் மகிழ்ச்சியை, ஒற்றுமையை, கனவுகளை, கல்வியை, சேமிப்பை, நம்பிக்கையை என எல்லாவற்றையும் ஒவ்வொன்றாகத் தின்று தீர்க்கையில், மக்கள் வேறு வழியின்றி இந்த உயிர்மாய்ப்புகளை ஒரு தீர்வாக நம்பத் தொடங்குகின்றனர். மிகத் தவறான இந்தத் தீர்மானத்தையே சரியானது என நம்ப வைத்ததில் காலங்காலமாக இந்த நாட்டை ஆண்டவர்களுக்குப் பெரும் பங்குண்டு. இப்போதும் அவர்களின் நெருக்கீடுகள் தீர்ந்ததாயில்லை நாடாளுமன்றத் தேர்தலுக்காக ஒவ்வொரு கட்சிகளும் வாக்குறுதிகள் என்ற போர்வையில் அடித்துவிடும் பொய்களைக் கேட்டபின்னும் உயிரோடு வாழ்தலே அதிசயம் தான்.



# மீனவர்கள் அத்துமீறல்: இணக்கப்பாட்டுப் பேச்சு

## மாத இறுதியில் ஏற்பாடு

**கொழும்பு, ஒக்.14**

**இலங்கை - இந்திய மீனவர்கள் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக அரசாங்கம் இரு நாடுகளினதும் கடற்றொழில் அமைச்சுக்களுக்கிடையில் எதிர்வரும் 29ஆம் திகதி கொழும்பில் விசேட பேச்சுவார்த்தையொன்றை ஏற்பாடு செய்துள்ளது.**

அதற்கமைய இலங்கை, இந்திய கடற்றொழில் அமைச்சுக்களுக்கு இடையில் 6ஆவது தடவையாக பேச்சுகளை முன்னெடுத்து அதன் ஊடாக இருதரப்பு இணக்கப்பாட்டுடன் பொது தீர்வொன்றை எட்டுவதற்கும் எதிர்பார்க்கப்படுவதாக வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார். கொழும்பில் கடற்றொழில் அமைச்சினால் இந்த பேச்சுவார்த்தையை நெறிப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இந்திய தூதுக்குழு பட்டியல் கிடைக்கப்பெற்றவுடன் அதற்கான ஏற்பாடுகள் துரிதமாக ஆரம்பிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

# நாட்டில் நாளாந்தம் 8 உயிர்மாய்ப்புகள்

நாட்டில் நாளாந்தம் 8 உயிர்மாய்ப்புச் சம்பவங்கள் பதிவாகுகின்றன என்று இலங்கை மருத்துவ சங்கம் தெரிவித்துள்ளது.
உலகில் அதிகளவான உயிர் மாய்ப்புச் சம்பவங்கள் பதிவாகும் நாடுகளில் இலங்கை 21 ஆம் இடத்தில் இருக்கின்றது.
சிறுவர்களின் உடல் , உள நடத்தைகளில் மாற்றங்கள் ஏற்பட்டால் அவர்களை உடனடியாக மருத்துவர்களிடம் அழைத்துச் செல்லவேண்டும். உங்களுக்குத் தெரிந்த ஒருவர் உள ரீதியாகப் பாதிக்கப்பட்டிருந்தால் 1926 அல்லது 1333 என்ற மனநல உதவி சேவைகள் தொலைபேசி இலக்கங்களுக்குத் தொடர்பு கொள்ளுமாறும் அந்தச் சங்கத்தின் தலைவர் மருத்துவர் சஜீவன அமரசிங்க தெரிவித்துள்ளார். (ச)

# ரயில் மோதி மூவர் சாவு

கட்டுகுருந்த புகையிரத நிலையத்துக்கு அருகில் நேற்று முன்தினம் ரயிலில் மோதி 3 வயது குழந்தை உட்பட மூவர் உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
பெலியத்தவிலிருந்து மருதானை நோக்கிப் பயணித்த அதிவேக ரயிலில் மோதியே இவர்கள் உயிரிழந்ததாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச)

# இணையவழி கிறீம்கள் மக்களே எச்சரிக்கை!

கொழும்பு, ஒக்.14
இணையவழி ஊடாக விற்கப்படும் சருமத்தை வெண்மையாக்கும் கிறீம்கள் மற்றும் வாசனைத் திரவியங்களை பயன்படுத்தும்போது அதிக கவனம் தேவை என்று நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது. இணையத்தில் பெண்கள் சருமத்தை வெண்மையாக்கும் கிறீம்களை பயன்படுத்துவதால் பல உடல்நலப் பிரச்சினைகள் எழுந்துள்ளன. எனவே, சமூக ஊடகங்கள் மூலம் இதுபோன்ற விடயங்களை முறைப்பாடு செய்வதிலும் பெறுவதிலும் மக்கள் அவதானமாக இருக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# பூஸா சிறையில் ஸ்மார்ட்போன்கள்

பூஸா சிறைச்சாலை முகாமின் அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் பிரகாரம் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஸ்மார்ட் தொலைபேசி மற்றும் பல தொலைபேசி பாகங்கள் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன. ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்கள் மற்றும் போதைப்பொருள் கடத்தல்காரர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள சிறையின் அறைகளுக்குப் பின்னாலேயே அவை கைப்பற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

**நாளை**

15.10.2024

செவ்வாய்க்கிழமை - புரட்டாதி - 29

சுபநேரம் : 10.32- 12.02

ராகுகாலம் : 03.02 - 04.32

**நாளொரு நல்வார்த்தை**

**எத்தனை முடியுமோ அத்தனை சம்பாதி;**
**எத்தனை முடியுமோ அத்தனை சேமி;**
**எத்தனை முடியுமோ அத்தனை பிறர்க்கு கொடு;**

- பைஷ் ஷெல்லி -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 196 ஆசனங்களுக்காக 8,388 பேர் களத்தில்

கொழும்பு, ஒக். 14

**நாடாளுமன்றத் தேர்தலில் 22 தேர்தல் மாவட்டங்களில் இருந்தும் 196 ஆசனங்களை மக்கள் வாக்குமூலம் கைப்பற்றுவதற்காக அரசியல் கட்சிகளில் இருந்தும் சுயேச்சைக்குழுக்களில் இருந்தும் 8 ஆயிரத்து 388 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.**

கம்பஹா மாவட்டத்தில் 19 ஆசனங்களுக்காக 27 அரசியல் கட்சிகள் மற்றும் 17 சுயேச்சைக்குழுக்களில் இருந்து 902 பேர் களமிறங்கியுள்ளனர்.

கொழும்பு மாவட்டத்தில் 18 ஆசனங்களுக்காக 27 அரசியல் கட்சிகள் மற்றும் 19 சுயேச்சைக்குழுக்களில் இருந்து 966 பேர் போட்டியிடுகின்றனர். கொழும்பு மாவட்டத்திலேயே இம்முறை அதிகளவு வேட்பாளர்கள் தேர்தலில் களமிறங்கியுள்ளனர். திகாமடுல்ல மாவட்டத்தில் 42 சுயேச்சைக்குழுக்குள் போட்டியிடுகின்றன. 7 ஆசனங்களுக்காக 22 அரசியல் கட்சிகளில் இருந்தும், சுயேச்சைக்குழுக்களில் இருந்தும் 640 பேர் போட்டியிடுகின்றனர். மொனராகலை மாவட்டத்தில் 6 ஆசனங்களுக்காக 12 அரசியல் கட்சிகள் மற்றும் 3 சுயேச்சைக் குழுக்களில் இருந்து 135 பேர் போட்டியிடுகின்றனர். தேர்தலில் குறைந்தளவான வேட்பாளர்கள் களமிறங்கும் மாவட்டம் அதுவாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-44)

# தமிழரசின் பித்தலாட்டம்; மக்கள் தீர்ப்பு வழங்குவர்

*சபா குகதாஸ் காட்டம்!*

யாழ்ப்பாணம், ஒக் 14

பொதுமக்களது அர்ப்பணிப்பில் வளர்க்கப்பட்ட இலங்கைத் தமிழரசுக் கட்சி, தமிழ் மக்கள் சார்பில் நியாயமான அரசியல் தீர்மானங்களை எடுக்காது தமிழ்த் தேசிய அபிலாஷைகளைப் பலவீனப்படுத்தியுள்ளது. இதற்கு வடக்கு- கிழக்குத் தமிழ் மக்கள் பொதுத்தேர்தலில் தீர்ப்பு வழங்குவர்.

- இவ்வாறு வடக்கு மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்ட ஊடக அறிக்கையில்,

பல மிதவாதத் தலைவர்களதும் பொதுமக்களதும் அர்ப்பணிப்பில் வளர்க்கப்பட்ட இலங்கைத் தமிழரசுக் கட்சியைப் பல துண்டுகளாக உடைத்து ஒற்றுமை என்ற இலக்கு சிதைக்கப்பட்டுள்ளது.

கடந்த கால தென்னிலங்கையின் அரச நிகழ்ச்சி நிரலில் தமிழ்த் தேசியத்தின் ஒற்றுமைக்கு சாவு மணி அடித்துள்ளனர் தமிழரசுக் கட்சியினர்.

சுயலாப நோக்கில் போலித் தேசியம் பேசி மக்களை மீண்டும் ஏமாற்றத் தயாராகும் தமிழரசுக் கட்சிக்கு வடக்கு - கிழக்கு தமிழ் மக்கள் தீர்ப்பு வழங்குவார்கள் - என்றுள்ளது. (ச-27)



# மரக்கறி விலை கடும் வீழ்ச்சி

கொழும்பு, ஒக். 14

கடும் மழையுடனான காலநிலையால் மரக்கறிகளின் விலையில் மிகப்பெரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக பேலியகொடை மெனிங் சந்தையின் பொது வர்த்தக சங்கத்தின் உப தலைவர் தெரிவித்துள்ளார். (ஒ-இ)

# தேர்தலின் பின்னர் தே.ம.சக்திக்கு ஆதரவு வழங்க கட்சிகள் விருப்பம்

கொழும்பு, ஒக். 14

பொதுத் தேர்தலில் போட்டியிடும் பல கட்சிகள் தேர்தலுக்குப் பின்னர் அமைக்கப்படும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு ஆதரவளிப்பதாக உறுதியளித்துள்ளன.

கடந்த காலங்களில் பொதுஜன பெரமுன, ஐக்கிய தேசியக் கட்சி, சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் கூட்டணிகளில் போட்டியிட்ட பல கட்சிகள் தேசிய மக்கள் சக்தியின் கூட்டணியின் கீழ் போட்டியிட பேச்சுகள் நடத்திய போதிலும் அதற்குச் சாதகமான பதில்கள் கிடைத்திருக்கவில்லை.

'சில கட்சிகள் தேசிய மக்கள் சக்தியின் தலைவர்களை சந்தித்து எமது கூட்டணியில் போட்டியிடுவதற்கான கோரிக்கையை முன்வைத்த போதிலும் கொள்கை ரீதியான பிரச்சினை காரணமாக அந்த வாய்ப்பு வழங்கப்படவில்லை' என ஜே.வி.பி.யின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்தார்.

அரசியல் ரீதியாக மோசடிகளில் ஈடுபடாத ஒரு குழுவினர், நாடாளுமன்றத்துக்கு கொண்டு வரப்பட வேண்டுமென நாட்டு மக்கள் எண்ணுகின்றனர். அதனால் எந்தவொரு கட்சியையும் தமது கூட்டணியில் இணைத்துக்கொள்ளவில்லை என்றும் ரில்வின் சில்வா கூறியிருந்தார்.

என்றாலும், குறித்த கட்சிகள் பொதுத் தேர்தலின் பின்னர் தேசிய மக்கள் சக்திக்கு தமது ஆதரவை வழங்குவதாக உறுதியளித்துள்ளன. பொது மக்களுக்கு சாதகமான சட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு ஆதரவளிப்பதாகவும் குறித்த கட்சிகள் உறுதியளித்துள்ளதாகத் தெரியவருகிறது. (ஒ-இ)

# தேர்தல் பரப்புரை விசேட பாதுகாப்பு



கொழும்பு, ஒக். 14

பொதுத் தேர்தலை முன்னிட்டு இடம்பெறவுள்ள தேர்தல் பரப்புரை நடவடிக்கைகளுக்காக விசேட பாதுகாப்பு வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த வேலைத்திட்டம் தொடர்பான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அதிகாரம் மாவட்டங்களுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர்களிடம் வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில், பாதுகாப்பு வேலைத்திட்டத்துக்காக நியமிக்கப்பட்டுள்ள குழுக்களின் பிரதிநிதிகளிடமிருந்து பெறப்படும் தகவல்களுக்கு அமைய உரிய பாதுகாப்பு வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் - என்றார். (ஒ-இ)

# 120 சீனர்கள் இலங்கையில் கைது



கொழும்பு, ஒக். 14

கண்டி, குண்டசாலையிலுள்ள சொகுசு வீட்டில் தங்கியிருந்து இணைய வழி மோசடியில் ஈடுபட்டதாகக் கூறப்படும் 120 சீனப் பிரஜைகள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சீனப் பிரஜைகளிடமிருந்து 15 கணினிகள் மற்றும் 300 கையடக்கத் தொலைபேசிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

நாடளாவிய ரீதியில் கடந்த ஏழு நாட்களில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் இணையவழி மோசடியில் ஈடுபட்டதாகக் கூறப்படும் 200 வெளிநாட்டுப் பிரஜைகள் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ஒ-இ)



# அதிபர் இடமாற்றம் அரசியல் தலையீடில்லை

யாழ்ப்பாணம், ஒக் 14

இதுவரைகாலமும் அதிபர் இடமாற்றங்களில் அரசியல்வாதிகளின் தலையீடுகள் காணப்பட்டன. எதிர்வரும் காலங்களில் அரசியல்வாதிகளின் தலையீடுகள் இல்லாமல் இடமாற்றங்கள் நீதியான முறையில் இடம் பெறவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைக்கின்றோம் என இலங்கை அதிபர் சேவை சங்கத்தின் நிறைவேற்றுக் குழு அதிகாரி சரத் ஆரியநந்த தெரிவித்தார்.

இலங்கை அதிபர் சேவை சங்கத்தின் யாழ்ப்பாண அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். (ஒ-25, 27)

# கால அவகாசம் நிறைவு

கொழும்பு, ஒக். 14

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்களுக்குச் செலவு அறிக்கை சமர்ப்பிப்பதற்கான கால அவகாசம் நேற்றுடன் பிற்பகல் 3 மணியுடன் நிறைவடைகிறதென்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதுவரை 8 பேர் மட்டுமே செலவு அறிக்கையை அளித்துள்ளதாகத் தேர்தல் ஆணையம் தெரிவித்தது.

செலவு அறிக்கையை வழங்காத வேட்பாளர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்க தேர்தல் ஆணையம் முடிவு செய்துள்ளது. (ஒ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ஆசிரியர் தின நிகழ்வு

கிளிநொச்சி,ஒக். 14
கிளிநொச்சி தெற்கு கல்வி வலயத்தின் முன்பள்ளி ஆசிரியர் தின நிகழ்வு கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

தெற்கு கல்வி வலயத்தின் முன்பள்ளி உதவிக்கல்விப்பணிப்பாளர் க.யுவராசா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக தெற்கு வலயக்கல்விப்பணிப்பாளர் பிரதீபா காயத்திரி கஜபதி கலந்து கொண்டிருந்தார்.

நிகழ்வில் பல வருடங்களாக சேவையாற்றிய ஓய்வு நிலை முன்பள்ளி ஆசிரியர்கள் கௌரவிக்கப்பட்டனர். தொடர்ந்து முன்பள்ளி ஆசிரியர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. (ச-113)



## திருகோணமலைச் சிறுமி சோழன் உலக சாதனை

திருகோணமலை, ஒக்.14
திருகோணமலையைச் சேர்ந்த 3 வயதுச் சிறுமியான பிரேம்ராஜ் தாரா அதிக ஞாபகத்திறன் நிறைந்த சிறுமியென சோழன் உலக சாதனையில் இடம்பிடித்துள்ளார்.

திருகோணமலை உவர்மலை விவேகானந்தா கல்லூரியில் சோழன் உலக சாதனைப் புத்தக நிறுவனத்தின் நடுவர்கள் முன்னிலையில், 2 முதல் 7 வரையான பெருக்கல் வாய்ப்பாடுகள், தனிம வரிசை அட்டவணையின் 50 கூறுகள், மனித உடல் உறுப்புகள் 6 இன் உட்பாகங்கள் போன்றவற்றை கூறியதோடு 100 சமூக ஊடகங்களின் சின்னங்களையும் பிழையின்றி அடையாளம் காட்டினார்.

சோழன் உலக சாதனை படைத்த சிறுமி பிரேம்ராஜ் தாராவுக்கு சட்டகம் செய்யப்பட்ட சான்றிதழ், நினைவுக் கேடயம், தங்கப் பதக்கம், அடையாள அட்டை மற்றும் பைல் போன்றவை சோழன் உலக சாதனைப் புத்தக நிறுவனத்தின் நடுவர்கள் மற்றும் சிறப்பு விருந்தினர்களால் வழங்கி வைக்கப்பட்டன. (ரி)



## பாரிசவாதம் தடுப்போம் விழிப்புணர்வு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக்.14
உலக பாரிசவாத தினத்தை முன்னிட்டு யாழ். திருக்குடும்ப கன்னியர்மடம் கல்லூரியில் 'யோக கலை மூலம் பாரிசவாதத்தைத் தடுப்போம்' எனும் தொனிப்பொருளில் யாழ். நீரிழிவுக் கழகத்தினரின் ஏற்பாட்டில் யோக பயிற்சி கடந்த வெள்ளிக்கிழமை நடத்தப்பட்டது.

வடமாகாண பாரிசவாத செயற்பாட்டுக் குழுவின் தலைவி டாக்டர் நரம்பியல் நிபுணர் அஜந்தா கேசவராஜ் நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக கல்லூரிப் பணிப்பாளர் டாக்டர் விஜிதா 'சிறுவயதிலிருந்து பாரிசவாதத்தை யோகா கலை மூலம் கட்டுப்படுத்துவது' பற்றி உரையாற்றினார்.

யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு அலகின் விரிவுரையாளர் கலாநிதி கேதீஸ்வரன் மற்றும் அவரது மாணவர்கள் யோகா பயிற்சியை செய்து காண்பித்தனர். நிகழ்வில் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் நீரிழிவுக்கழக அங்கத்தவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ரி)



## நூற்றாண்டு விழாவும், பரிசில் தின நிகழ்வும்

யாழ்ப்பாணம், ஒக்.14
செம்பியன்பற்று அ. த. க. பாடசாலையின் நூற்றாண்டு விழாவும், பரிசில்தின நிகழ்வும் பாடசாலை அதிபர் தலைமையில் பாடசாலை முன்றலில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது

நிகழ்வின் முதன்மை விருந்தினராக வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் கனகசபை சத்தியபாலன், சிறப்பு விருந்தினராக பாடசாலை பழைய மாணவனும், பருத்தித்துறை பிரதேசசபைச் செயலாளருமான அருணகிரி வினோராஜ் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-45-9)





மாவட்ட மட்ட ஆங்கில மற்றும் சிங்களமொழி மூலமான தேசிய கலை இலக்கியப் போட்டி நிகழ்வு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை யாழ். மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் மாவட்டப் பதில் செயலர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நடைபெற்றது. (ச-66)

கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தில் விஜயதசமி நாளன்று சிறுவர்களுக்கான ஏடு தொடக்கும் நிகழ்வு மற்றும் நவராத்திரி பூஜை வழிபாடு அதிபர் கே.தவகீஸ்வரன் தலைமையில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. (ரி-17)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சீரற்ற காலநிலை இடர்; அரசாங்கம் நிவாரணம்

கொழும்பு, ஒக்.14

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக நிவாரணம் வழங்குமாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க பணிப்புரை விடுத்தார்.

இந்த நிவாரணப் பணிகளுக்காக 50 மில்லியன் ரூபாவை ஒதுக்குமாறு நிதி அமைச்சுக்குப் பணிப்புரை விடுத்த ஜனாதிபதி, உரிய நிவாரணங்களை முறையாக மக்களுக்கு வழங்குவதற்கு ஒருங்கிணைந்து செயற்படுமாறும் அரச அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார். (ச-இ)

## ஹரியானா சட்டமன்றத்தில் 96 வீதத்தினர் கோடீஸ்வரர்

புதுடில்லி, ஒக்.14

இந்தியாவின் ஹரியானா மாநிலத்தில் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களில் 96 சதவீதமானோர் கோடீஸ்வரர்கள் எனவும் 12 சதவீதமானோர் மீது குற்ற வழக்குகள் உள்ளமையும் தேர்தல் உரிமைகள் தன்னார்வ அமைப்பு நடத்திய ஆய்வில் தெரிய வந்துள்ளது.

ஹரியானா சட்டப் பேரவை 90 உறுப்பினர்களைக் கொண்டது. அண்மையில் தெரிவானவர்களில் 86 சட்டமன்ற உறுப்பினர்கள் கோடீஸ்வர்கள். கடந்த 2019ஆம் ஆண்டு இந்த எண்ணிக்கை 93 சதவீதமாக இருந்தது.

இச் சட்டமன்ற உறுப்பினர்களில் 44 சதவீதமானோர் 10 கோடி ரூபாவுக்கும் அதிகமாக சொத்து வைத்துள்ளனர். 2.2 சதவீதமானோர் 20 இலட்சம் ரூபாவுக்கும் குறைவான சொத்துகளை வைத்துள்ளனர்.

அண்மையில் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களின் சொத்து மதிப்பு 2019ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 59 சதவீதமாக அதிகரித்துள்ளது. அதுமட்டுமின்றி தெரிவுசெய்யப்பட்ட 12 சட்டமன்ற உறுப்பினர்கள் அதாவது 13 சதவீதமானோர் மீது குற்ற வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்த எண்ணிக்கை 2019ஆம் ஆண்டில் 7 ஆக இருந்தது. இவர்களுள் 63 சதவீதமானோர் பட்டதாரிகள் அல்லது உயர் பட்டம் பெற்றவர்கள். 29 சதவீதமானோர் 8 முதல் 12 ஆம் வகுப்பு வரையில் கல்வி கற்றுள்ளனர் என்று அந்த ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் செல்லத்துரை
கணநாதன்

கண்முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எம் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர்வாழும்
நீங்கள் இவ்வுலகை விட்டு மறைந்து
பத்து ஆண்டுகள் ஆனாலும்
இன்றும் எம் மனங்களில்
வாழ்ந்து கொண்டு இருக்கின்றீர்கள்
ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !

மலர்வு 11.07.1950
உதிர்வு 05.10.2014

"தர்மகிரி"
அராலி கிழக்கு,
வட்டுக்கோட்டை.

குடும்பத்தினர்

(CS 1604) (N-1)

## 10ஆம் ஆண்டு நினைவலைகள்

அமரர் கந்தையா நயினார்
(அம்பாள் பழைய பாட்ஸ் கடை உரிமையாளர்)



தோற்றம் 10.01.1947
மறைவு 14.10.2014

திதி:14.10.2024

இமைகள் மூடித் திறப்பதற்குள்
வருடங்கள் பத்தாகி விட்டன
நாம் வாழும் நாள்களில்
உம் நினைவுகள் - எம்முடன்
என்றென்றும் வாழும்

நீங்கா நினைவுகளுடன்...
குடும்பத்தினர்.

இல.05, 5ஆம் ஒழுங்கை,
அரசடி வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

தோற்றம் 15 . 06 . 1950



மறைவு 11 . 10 . 2024

### கிருஸ்ணசாமி சுப்பிரமணியம்

உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட கிருஸ்ணசாமி சுப்பிரமணியம் கடந்த (11.10.2024) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஸ்ணசாமி - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான அப்புத்துரை - தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், பேபிசரோசாவின் பாசமிகு கணவரும், சிவதுர்க்கா (அவுஸ்ரேலியா), முருகதாஸ் (பிரான்ஸ்), வர்சினி (பிரான்ஸ்), சண்முகதாஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், முகுந்தன், தினேஸ், அனோஜா, கல்யாணி ஆகியோரின் பாசமிகு மாமனாரும்,தங்கவேல் (கனடா), செல்வநாயகி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், சபரீசன், பவித்திரன், ஷிரவன், ஷாகித்யன், வாகித்யன், திபீசன், வர்மிதா, கபிலாஸ், ஆதவன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.10.2024) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


குமரகோட்டம்
கோண்டாவில்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(CS96449) N-1)

## மரண அறிவித்தல்

பிறப்பு 28.05.1946



இறப்பு 11.10.2024

### பாலசிங்கம் நாகநாதபிள்ளை (நாதன், ராசன்)

(TNG Brothers பிரபல வர்த்தகரும் புகையிலை வியாபாரியும் - கொழும்பு)

சரவணை மேற்கு வேலணையை பிறப்பிடமாகவும், இணுவில் கிழக்கு சிவகாமி அம்மன் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட பாலசிங்கம் நாகநாதபிள்ளை கடந்த (11.10.2024) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பாலசிங்கம் - நகுலாம்பிகை தம்பதியரின் அன்பு மகனும், நடராசா - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், சிவகாமசுந்தரி (தேவி) யின் பாசமிகு கணவரும், வினோதினி (லண்டன்), வினோதீபன் (சுவிஸ்), வினோராஜ் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பகீரதன் (லண்டன்), துர்க்காயினி (சுவிஸ்), பிரியங்கா (இணுவில்) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற தங்கவேல், காலஞ்சென்ற ஞானவேல் (அப்பன்), அஞ்சலாதேவி (பிரான்ஸ்), புஸ்பலீலா (சுவிஸ்), தற்பரநாயகி (ஓய்வுபெற்ற ஆசிரியர், கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரனும், நவரத்தினராசா (இணுவில்), காலஞ்சென்ற சிவலோகநாதன், சண்முகராசா (இணுவில்), காலஞ்சென்ற ஸ்ரீகாந்தராசா, மகேஸ்வரி (இணுவில்), ஸ்ரீரஞ்சன் (சுவிஸ்), செல்வராணி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற இராசதுரை புனிதவதி, அரியசிவம் உமாபதி, பொன்னம்பலம் சிறோஜினி ஆகியோரின் சம்பந்தியும், சங்கரின் பாசமிகு மாமனாரும், விஷால், அபிஷா, அஸ்வரன், அதீசன், அக்ஷரன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (14.10.2024) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடன் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


சிவகாமி அம்மன் கோயிலடி,
இணுவில் கிழக்கு.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(CS/56438) J-4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம்
30.10.1939

மறைவு
26.09.2023

கடந்த 2023ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 9ஆம் நாள் செவ்வாய்க்கிழமை (26.09.2023) பூர்வபட்ச துவாதசி திதியில் இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

தேசகீர்த்தி லயன்
திரு.சரவணமுத்து ஆறுமுகநாதன்
(முன்னாள் உப தலைவர்
தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானம்)

அவர்களின்
வருஷாப்திகம் நிகழ்வுகள் இன்று (14.10.2024) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளன. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்.
கே.கே.எஸ்.வீதி, தெல்லிப்பழை.

# சலாம்போட மறுத்ததால் தெரிவில் நீக்கினார்கள்

## மிதிலைச்செல்வி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 14

தமிழரசுக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் என தன்னைத்தானே கூறிக் கொள்ளும் ஒருவரின் கருத்துகளுக்கு சலாம் போடாத காரணத்தால் தமிழரசுக் கட்சியில் நீண்ட நாள் பயணித்த ஆளுமைமிக்க பெண்களைப் போட்டியிடவிடாமல் தடுத்தார்கள் எனத் தமிழரசுக் கட்சியின் கொழும்புக் கிளை முன்னாள் செயலாளர் மிதிலைச்செல்வி ஸ்ரீ பத்மநாதன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழரசுக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் எனக் கூறுபவர் தமது கட்சியில் வேட்பாளராகப் போட்டியிடுவதற்கு பெண்களைத் தேடினோம் பலரும் பின்னடிக்கிறார்கள் என்ற தோரணையில் கருத்து வெளியிட்டார். அவரது கருத்தை நான் முற்றாக மறுக்கிறேன். தமிழரசுக் கட்சியில் ஆளுமைமிக்க பெண்கள் இருக்கும்போது எங்கோ எல்லாம் தேடி இரு பெண்களைப் பிடித்து வந்து நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்காக இறக்கி உள்ளனர்.

தமிழரசுக்கட்சியில் இருக்கும் என்னைப் போன்ற பெண்கள் ஊடகப் பேச்சாளருக்கு சலாம் போடும் பெண்களாகவோ அல்லது தலையாட்டும் பெண்களாகவோ இருக்காத காரணத்தால் எம்மைத் தேர்தலில் நிறுத்தவில்லை.

நான் முப்பது வருடங்களுக்கு மேலாக தனியார் காப்புறுதித்துறையில் பல பதவிகளையும், தமிழரசுக் கட்சியின் கொழும்புக் கிளையில் பத்து வருடங்களுக்கு மேலாகப் பல்வேறு பதவி நிலைகளையும் வகித்தவள்.

தமிழரசுக் கட்சிக்குள் ஜனநாயகம் இல்லாத நிலையில் அந்தக் கட்சியிலிருந்து வெளியேறி விக்னேஸ்வரனே தலைவராகக் கொண்ட தமிழ் மக்கள் கூட்டணியில் மான் சின்னத்தில் இம்முறை தேர்தலில் போட்டியிடுகிறேன்.

தமிழரசுக் கட்சியினுடைய தலைவராக இருந்த மாவை சேனாதிராஜா அண்மையில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் ஆளுமை உள்ள பலரை தேர்தலில் போட்டியிடுவதற்காக பிரேரித்த நிலையில் அது நடைபெறவில்லை அதனால் தலைவர் பதவியில் இருந்து விலகினேன் என வெளிப்படையாகப் பேசி இருந்தார். ஒரு தலைவரால் கட்சியில் செயற்பட முடியாத அளவுக்கு ஒரு சிலரின் செயற்பாடு அத்து மீறிய நிலையில் அந்தக் கட்சிக்குள் இருப்பது தவறு என நினைத்து என்னைப் போன்ற பலர் வெளியேறினர்.

தமிழ்த் தேசிய உணர்வுடன் தமிழரசுக் கட்சிக்குள் பயணித்தவர்கள் கட்சிக்குள் இடம்பெறும் விரும்பத்தகாத செயற்பாடுகள் காரணமாகக் கட்சியிலிருந்து விலகுவதாக எழுத்துமூலம் கடிதங்களை அனுப்பி உள்ளனர்.

அது மட்டுமல்லாது கட்சியின் ஆதரவாளர்கள் மற்றும் பிரதேசசபை முன்னாள் உறுப்பினர்கள் பலரும் தமிழரசுக் கட்சியிலிருந்து விலகுவதற்கான தீர்மானங்களை எடுத்த வருகின்றனர். ஆகவே தமிழரசுக் கட்சி தமிழ் மக்களுக்கான கட்சியாக இனியும் செயற்படமுடியாத நிலையில் தமிழரசுக் கட்சியின் கொள்கைகளை மாற்றியவர்கள் நிச்சயம் மக்களால் தோற்கடிக்கப்படுவார்கள் - என்றார். (அ-ஒ-27)

# ஒற்றுமைக்கான தெரிவு சங்குக் கூட்டணியே

## கூறுகிறார் சிவசக்தி ஆனந்தன்

வவுனியா, ஒக். 14

ஒற்றுமையை விரும்பும் தமிழ் மக்களின் தெரிவு ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியாகும். அதற்குப் பலமான ஆணையை வழங்கவேண்டும் என்று ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் வன்னி மாவட்ட வேட்பாளர் சிவசக்தி ஆனந்தன் கோரியுள்ளார்.

அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது-

போரின் பின்னரான சூழலில் தமிழ் மக்கள் ஒற்றுமையை மையப்படுத்தியே தமது ஆணையை வழங்கி வந்துள்ளார்கள். அந்த வகையில் தொடர்ச்சியாக ஜனநாயக தமிழ்த்தேசியக் கூட்டணியாக நாம் ஐந்து கட்சிகள் ஒன்றிணைந்து செயற்பட்டு வருகின்றோம்.

இந்தக் கூட்டணியில் குறைகள் நிறைகள் இருந்தாலும் கூட, தமிழ்மக்களின் விருப்புக்கு அமைவாகவும், அவர்களின் அபிலாஷைகளை [...] அடைந்து கொள்வதற்காகவும் இணைந்து செயற்படும் முக்கியமானதொரு அரசியல் சக்தியாக இருக்கின்றமை அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டதொரு விடயமாகும்.

எமது கூட்டைப் பலவீனப்படுத்துவதற்கு அண்மைய நாட்களில் எதிர்மறையான பல விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. இருப்பினும், தமிழ் மக்கள் யதார்த்தத்தை நன்கு அறிவார்கள் என்ற நம்பிக்கை எமக்குள்ளது.

அந்த வகையில், நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தல் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் மிகவும் முக்கியமானது. திருப்புமுனையை ஏற்படுத்துவதாகவே இருக்கப்போகின்றது. தமிழ் மக்கள் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியைப் பலப்படுத்துவதன் ஊடாகவே ஏகோபித்த நிலைப்பாட்டை வெளிப்படுத்த முடியும். அதற்காக வடக்கு, கிழக்கு முழுவதும் தமிழ் மக்கள் தங்கள் ஆணையை உயர்ந்த [...] அளவில் வழங்க வேண்டியது தவிர்க்க முடியாதவொன்றாகின்றது - என்றுள்ளது. (அ-ஒ-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்குக் கூட்டணி அறமற்றதொன்று

## ஐங்கரநேசன் சாடல்

யாழ்ப்பாணம், ஒக். 14

தமிழ் மக்களின் கூட்டு உழைப்பால் பிரபல்யமான சங்குச் சின்னத்தைத் தனிப்பட்ட சில கட்சிகள் தந்திரமாகத் தங்கள் வெற்றிக்காகப் பயன்படுத்துவது அரசியல் அறமல்ல என்பதால் சங்குக்கூட்டணியில் இடம்பெறமுடியாது -இவ்வாறு தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கமும் சனநாயகத் தமிழரசுக் கட்சியும் இணைந்து சனநாயகத் தமிழ் அரசுக் கூட்டமைப்பாக இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில் சுயேச்சைக் குழுவாக மாம்பழச் சின்னத்தில் போட்டியிடுகின்றன. இது தொடர்பாகத் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது-

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் பொதுச்சபையும், ஏழு தமிழ்த்தேசியக் கட்சிகளும் இணைந்து தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பாகப் பொதுவேட்பாளரை நிறுத்தியிருந்தன. இதன் போது இரண்டு தரப்பினருக்குமிடையில் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையில் தமிழ்ப் பொதுவேட்பாளராக நிறுத்தப்படுபவரும் அவருக்கான தேர்தல் சின்னமும் தமிழ்ப் பொது நிலைப்பாட்டுக்கான குறியீடாக மட்டுமே கருதப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இத் தேர்தலில் கட்சிகளைக் கடந்து தமிழினமாகச் சிந்திப்போம் என்ற கோஷம் முன்வைக்கப்பட்டது. பொதுவேட்பாளருக்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்ட கட்சிகளைக் கொண்ட உறுப்பினர்களும் தொண்டர்களுங்கூட பொதுவேட்பாளரின் சங்குச் சின்னத்துக்குப் பெருமளவில் வாக்களித்திருந்தார்கள். தமிழ் மக்கள் பொதுச்சபை நாடாளுமன்றத் தேர்தலில் நேரடியாக ஈடுபடமுடியாது என்ற நிலைப்பாட்டை எடுத்துள்ளது. இதனால் இப்போது தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பு என்ற அமைப்பு இல்லை. இரண்டு தரப்புகளும் இணைந்து இறுதியாக நிகழ்த்திய கலந்துரையாடலில் தமிழ் மக்கள் பொதுச்சபையும் பங்கேற்று தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பாகப் நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொள்ளாவிடில் தமிழ்த் தேசியப் பசமை இயக்கம் இந்த அணியில் இடம்பெறாது என்று மிகத் தெளிவாக தெரியப்படுத்தியிருந்தோம். தமிழ் மக்களின் கூட்டு உழைப்பால் பிரபல்யமான சங்குச் சின்னத்தைத் தனிப்பட்ட சில கட்சிகள் தந்திரமாகத் தங்கள் வெற்றிக்காகப் பயன்படுத்துவது அரசியல் அறமல்ல என்பதால் சங்குக்கூட்டணியில் இடம்பெறமுடியாது என்பதை நாம் தெரிவித்திருக்கின்றோம்.

தமிழரசுக்கட்சியில் நிலவுகின்ற தமிழர் விரோத, ஜனநாயக விரோதப் போக்குகளால் அக் கட்சியில் இருந்து உண்மையான தமிழ்த் தேசியப் பற்றாளர்கள் வெளியேற நிர்ப்பந்திக்கப் பட்டுள்ளார்கள். அவர்கள் உருவாக்கியுள்ள சனநாயகத் தமிழரசுக் கட்சியுடன் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கமும் இணைந்து சனநாயகத் தமிழரசுக் கூட்டமைப்பு உருவாகியுள்ளது. இக்கூட்டமைப்பு சுயேச்சையாக ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா தலைமையில் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுகின்றது. ஏற்கனவே தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் பயன்படுத்திய மாம்பழச் சின்னத்தையே நாங்கள் தேர்தல் ஆணையத்திடம் கேட்டு இந்தத்தேர்தலில் எமது சின்னமாகப் பெற்றுக்கொண்டுள்ளோம். காலத்தின் கட்டாயமாகப் போட்டியிடுகின்ற எங்களை ஆதரிக்கவேண்டுமென்று தமிழ் மக்களைக் கேட்டுக் கொள்கின்றோம் - என்றார். (அ-ஒ-இ)




ஈழத்தின் முதன்மைச் சித்தர்

அருட்திரு **கடையிற் சுவாமிகளது**

**133ஆவது குருபூசையும் மகேஸ்வர பூசையும்**

காலம் : 15.10.2024 செவ்வாய்க்கிழமை
காலை 8.00 மணி
(புரட்டாதி மாதம், பூரட்டாதி நட்சத்திரம்)

இடம் : கடையிற் சுவாமிகள் சமாதிச் சிவாலயம்
45, கடையிற் சுவாமி வீதி, நீராவியடி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

***அடியார்கள் அனைவரும் வருகைதந்து குருவருள் பெற்றுய்வீர்களாக!***

**கடையிற் சுவாமிகள் அடியார்கள்**



**மணிவிழா வாழ்த்து**

**எமது வித்தியாலயத்தின் சங்கீத பாட ஆசிரியர்**

**திருமதி தவராணி ஜெயராசா**

**(SLTS 1)**




**சேவை விபரம்**

- 03.01.1990 - 02.01.1996
  யா/ எழுதுமட்டுவாழ் ஸ்ரீ கணேச வித்தியாலயம்
- 03.01.1996 - 01.02.1997
  யா/ சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை
- 02.02.1997 -15.02.1998
  யா/ மந்துவில் றோமன் கத்தோலிக்க பாடசாலை.
- 16.02.1998-01.02.2015
  யா/ அல்லாரை அரசினர் தமிழ் வித்தியாலயம்
- 02.02.2015-14.10.2024
  யா/ மீசாலை விக்கினேஸ்வர மகா வித்தியாலயம்

மங்காத சிரிப்போடு
தங்காத சினத்தோடு
தன் கீத வளத்தாலே
சங்கீதப் பாடமதையே
இங்கிதமாய் தந்தவளே வாழிய நீவிர்

நற்சரத்தை யணிந்தவராய்
சச்சரவை உணர்ந்தவராய்
நற் சிரத்தை கொண்டவராய்
தற்தரத்தின் வளத்தாலே
இங்கிதமாய் வந்தவளே வாழிய நீவிர்

தேடிய அறிவது அழியாது
பாடிய பதிகமது சலியாது
கூடிய மதியகமது நலியாது
ஆடிய விதியது பலியாது
இங்கிதமாய் என்றும் [illegible] வாழ்த்துகின்றோம்

Congratulations! Congratulations!

**வாழ்த்துவோர் ஆசிரியர் நலன்புரிச் சங்கம்**

**யா/மீசாலை விக்னேஸ்வர மகா வித்தியாலயம்.**


## தெற்கில் சில வலயங்களில் பாடசாலைகளுக்கு விடுமுறை!

கொழும்பு, ஒக். 14

சீரற்ற வானிலை காரணமாக சில கல்வி வலயங்களில் உள்ள பாடசாலைகளை இன்றும் நாளையும் மூடுவதற்கு கல்வி அதிகாரிகள் தீர்மானித்துள்ளனர்.

கம்பஹா மற்றும் களனி கல்வி வலயங்களில் உள்ள பாடசாலைகளுக்கு இரு நாளும் விடுமுறை வழங்கப்பட்டுள்ளது. அத்துடன், கொழும்பு கல்வி வலயத்தில் உள்ள அனைத்து பாடசாலைகளும் இன்று மாத்திரம் மூடப்படும் என மேல் மாகாணக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (அ-ஒ-இ)



## சுகாதாரச் சீர்கேடு; தண்டம் விதிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 14

வல்வெட்டித்துறை மற்றும் பருத்தித்துறை நகர சபையின் ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகளில் சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்கிய 9 உணவு கையாளும் நிலையங்களுக்கு ஒரு இலட்சம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறையில் இயங்கிய உணவு கையாளும் நிலையங்களில் திடீர்ப் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன. சுகாதாரச் சீர்கேட்டுடனும், சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாத உணவு கையாளும் நிலையங்கள் ஐந்து இனம் காணப்பட்டன.

அவற்றுக்கு எதிராக பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் கடந்த வெள்ளிக்கிழமை வழக்குத் தொடரப்பட்டபோது உணவு கையாளும் நிலையங்களின் ஐந்து உரிமையாளர்களும் மன்றில் தோன்றி தம் மீதான குற்றச்சாட்டுகளை ஏற்றுக்கொண்டனர். அதனை அடுத்து அவர்களை எச்சரித்த மன்று ஐவருக்கும் 70 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது.

அதேவேளை பருத்தித்துறை நகர சபையின் ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட சோதனைகளின் போது சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாத உணவு கையாளும் நிலையங்களுக்கு எதிராகவும் அன்றைய தினம் வழக்குத் தொடரப்பட்டது.

அதன் போது உணவு கையாளும் நிலையங்களின் 4 உரிமையாளர்கள் மன்றில் தோன்றி தம் மீதான குற்றத்தை ஏற்றுக்கொண்டதை அடுத்து அவர்களை எச்சரித்த மன்று 30 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது.

அன்றையதினம் மன்றுக்குச் சமுகமளிக்காத உணவு கையாளும் நிலைய உரிமையாளருக்கு எதிர்வரும் 22ஆம் திகதி மன்றில் சமுகமளிக்குமாறு அழைப்புக் கட்டளையும் அனுப்பப்பட்டுள்ளது. (அ-ஒ-20)



## டி.என்.ஏ. இன் கட்சியின் வேட்பாளர் அறிமுகம்

யாழ்ப்பாணம், ஒக். 14

ஜனநாயக தேசிய கூட்டணியின் (டி.என்.ஏ.) வேட்பாளர் அறிமுக நிகழ்வும் ஆரம்பப் பரப்புரைக்கூட்டமும் நேற்று நடைபெற்றது.

நேற்றுக் காலை யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விருந்தினர் விடுதி ஒன்றில் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும், கட்சியின் யாழ். தேர்தல் மாவட்ட முதன்மை வேட்பாளருமான அங்கஜன் இராமநாதனின் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. ஜனநாயக தேசியக் கூட்டணி தபால்பெட்டிச் சின்னத்தில் களமிறங்குகின்றது. (ஒ-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழரசுக் கட்சியின் வேட்பாளர் அறிமுகம்




யாழ்ப்பாணம், ஒக். 14

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்ட வேட்பாளர் அறிமுக நிகழ்வு யாழ்ப்பாணத்தில் நேற்று மாலை நடைபெற்றது. தமிழரசுக் கட்சியின் மூத்த துணைத் தலைவரும் வடக்கு மாகாணசபையின் அவைத் தலைவருமான சீ.வீ.கே.சிவஞானம் தலைமையில் யாழிலுள்ள தந்தை செல்வா மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது வேட்பாளர்கள் அழைத்து வரப்பட்டு மங்கள விளக்கேற்றலுடன் வேட்பாளர் அறிமுக நிகழ்வு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந் நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு இலங்கைத் தமிழரசு க்கட்சியின் முன்னாள் தலைவர் மாவை. சேனாதிராசா அழைக்கப்பட்ட போதும், அவர் கலந்துகொள்ளவில்லை. வேட்பாளர்கள் 9 பேரும் பங்கேற்றனர். (அ-ஒ-20)

### டெங்குநோய்...

நல்லூரில் அமைந்துள்ள யாழ். மாநகர சபையின் சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த வருடம் ஜனவரி மாதத்தில் 2 ஆயிரத்து 816 டெங்கு நோயாளர்களும், பெப்ரவரி மாதம் ஆயிரத்து 409 டெங்கு நோயாளர்களும், மார்ச் மாதத்தில் 525 டெங்கு நோயாளர்களும் இனம் காணப்பட்டுள்ளனர். பின்னர் ஏப்ரல் மாதம் முதல் மாவட்டத்தில் டெங்கு நோய் படிப்படியாகக் குறைவடைந்து, கட்டுப்பாட்டில் இருக்கின்றது. அந்த வகையில் ஏப்ரல் மாதம் 171 டெங்கு நோயாளர்களும், மே மாதம் 91 நோயாளர்களும், ஜூன் மாதம் 71 டெங்கு நோயாளர்களும், ஜூலை மாதம் 64 டெங்கு நோயாளர்களும், ஓகஸ்ட் மாதம் 61 டெங்கு நோயாளர்களும், செப்ரெம்பர் மாதம் 42 டெங்கு நோயாளர்களும், ஒக்ரோபர் மாதத்தில் இன்றுவரையான காலப் பகுதியில் 18 டெங்கு நோயாளர்களும் இனம் காணப்பட்டுள்ளனர். இந்த வருடத்தின் இதுவரையான காலப் பகுதியில் கடந்த பெப்ரவரி மாதத்தில் டெங்கு நோய் காரணமாக ஒரே ஒரு இறப்புப் பதிவாகியுள்ளது.

மாவட்டத்தில் கடந்த 2023 ஆம் ஆண்டில் 3 ஆயிரத்து 986 டெங்கு நோயாளர்கள் இனம் காணப்பட்டுள்ளனர். கடந்த வருடம் நவம்பர் மாதத்தில் 179 டெங்கு நோயாளர்களும், டிசெம்பர் மாதத்தில் அதிகூடியளவில் 2 ஆயிரத்து 180 டெங்கு நோயாளர்களும் இனம் காணப்பட்டிருந்தனர்.

இந்த வருடம் ஏப்ரல் மாதம் முதல் ஒக்ரோபர் மாதம் வரையான காலப் பகுதியில் கடந்த ஐந்து வருடங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது மிகக் குறைவான டெங்கு நோயாளர்களே இனம் காணப்பட்டுள்ளனர். இதனடிப்படையில் தற்போது டெங்கு நோய், யாழ். மாவட்டத்தில் கட்டுப்பாட்டில் உள்ளது. எனினும், தற்போது ஆரம்பித்துள்ள பருவமழை காரணமாக எதிர்வரும் நவம்பர், டிசெம்பர், ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் டெங்கு நோயின் தாக்கம் அதிகரிப்பதற்கான நிலைமை காணப்படுவதால் பொதுமக்கள் அனைவரும் ஒத்துழைப்பு வழங்கி தங்கள் வீடுகள், வேலைத் தளங்கள் மற்றும் பொது இடங்களைத் துப்பரவாக வைத்திருப்பதன் மூலம் யாழ். மாவட்டத்தில் டெங்கு நோயின் தாக்கத்தைத் தொடர் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதுடன் இறப்புகளையும் தவிர்க்க முடியும் - என்றார். (அ-ஒ-66)

### யாழ்...

கடந்த ஆட்சிக் காலத்தில் புதிய மதுபான சாலைக்கான அனுமதிப் பத்திரங்களை, நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்கள் சிலர் தமது பெயரில் பெற்று, அதனை வர்த்தகர்களுக்கு விற்பனை செய்து, அந்த வர்த்தகர்கள் மூலமே மதுபானசாலைகளைத் திறப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் மாத்திரம் 26 மதுபான சாலைகளுக்கான அனுமதிகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

யாழ்ப்பாண மாவட்டத்தில், சங்கானை, தெல்லிப்பழை, உடுவில், கரவெட்டி பிரதேச செயலர் பிரிவுகளில் தலா ஒரு மதுபானசாலைக்கும், நல்லூர் மற்றும் கோப்பாயில் தலா 2 மதுபானசாலைகளுக்குமாக 8 மதுபானசாலைகளுக்கான அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சிப் பிரதேசத்தில் 12, கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவில் 4, பளை மற்றும் பூநகரிப் பிரதேச செயலர் பிரிவுகளில் தலா ஒவ்வொரு மதுபானசாலைகளுக்கும் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

இவற்றில் யாழ்ப்பாண மாவட்டத்தில் கோப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவில் மாத்திரம் ஒரு மதுபானசாலைக்கான அனுமதி மக்கள் எதிர்ப்பின்மையால் பிரதேச செயலரால் வழங்கப்பட்டுள்ளது. மற்றொரு மதுபானசாலைக்கான அனுமதி மக்கள் எதிர்ப்பால் வழங்கப்படவில்லை. யாழ்ப்பாண மாவட்டத்தில் எஞ்சியுள்ள 7 மதுபான சாலைகளுக்கும் மக்கள் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர். இதனால் பிரதேச செயலர்கள் அனுமதி வழங்கவில்லை.

கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சியில் 12 க்கும், கண்டாவளையில் 4 க்கும், பளையில் ஒன்றுக்குமான அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளன. பூநகரிப் பிரதேச செயலர் பிரிவில் மக்கள் எதிர்ப்பால் அனுமதி இன்னமும் வழங்கப்படவில்லை.

இதேவேளை - புதிதாக மதுபானசாலைகள் அமையப்பெறும் பட்சத்தில் பொது மக்கள் பாதிப்பு, சமூக கலாசாரச் சீரழிவு, பொருளாதாரப் பாதிப்பு ஏற்படக் கூடிய நிலைமை காணப்படும் என பிரதேச செயலர்கள் அறிக்கையிட்டுள்ளமையால், எனவே புதிதாக மதுபானசாலை அமைப்பது தொடர்பாக மீள்பரிசீலனை செய்து அது தொடர்பாக அறியத்தருமாறு மதுவரித்திணைக்களத்தின் ஆணையாளரை, யாழ். மாவட்ட பதில் மாவட்டச் செயலர் கோரி கடிதம் அனுப்பியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-5)

### ஒதுங்கும்...

நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் தேசிய மக்கள் சக்தி வேட்பாளர்கள் மத்தியில் உரையாற்றும்போது அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்களாக இருந்த பலர் இம்முறை தேர்தல் பரப்புரையிலிருந்து ஒதுங்கி உள்ளனர். மக்கள் எதிர்பார்த்த மாற்றம் இதுதான். ஜனாதிபதித் தேர்தல் பரப்புரையின் போது எதிர்க்கட்சியினரால் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் பொய்யானவை என்பதை 21 நாட[illegible] தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தால் நிரூபிக்க முடிந்துள்ளது. எதிர்க்கட்சி முகாமில் இப்போது பொதுத்தேர்தலுக்கான கோஷங்கள் எதுவும் இல்லாமல் போய்விட்டது.

எதிர்க்கட்சி முகாம் எங்களுக்கு எதிராகத் தவறான விமர்சனங்களைச் செய்தது. தேசிய மக்கள் சக்திவெற்றிக்குப் பிறகு மோதல்கள் ஏற்படும் என்றும் எரிவாயு மற்றும் எரிபொருள் வரிசைகள் இருக்கும் என்றும் சொன்னார்கள். அமெரிக்க டொலருக்கு நிகரான ரூபா மதிப்புக் குறையும், சர்வதேச ரீதியில் இலங்கை தனிமைப்படுத்தப்பட்ட நாடாகும் எனப் பலவற்றைக் கூறினர். ஆனால் இந்த விமர்சனங்கள் அனைத்தும் 21 நாட்களுக்குள் அவர்கள் கண் முன்னே சிதைந்துவிட்டன - என்றார். (அ-ஒ-இ)

### மர்மப்பொருள்...

அந்த இளைஞர் வயற் காணியைத் துப்புரவு செய்துகொண்டிருந்தபோதே, மண்ணுள் புதையுண்டிருந்த இந்த மர்ம வெடிபொருள் வெடித்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. (அ-ஒ-,20-113)

### ஹிருணிகாவும்...

இருந்து நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர பதவி விலகியுள்ளார்.

அதேபோன்று, ஐக்கிய மக்கள் சக்தியின் இரத்தினபுரி மாவட்ட வேட்பாளர் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் கருணாரத்ன பரணவிதானவும் பொதுத் தேர்தலில் இருந்து விலகியுள்ளார். தேர்தலில் தமக்கு வாக்களிக்க வேண்டாம் என அவர் மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் வேட்பு மனுத் தாக்கல் செய்த பலர் அந்தக் கட்சியிலிருந்து விலகி தமக்கு வாக்களிக்க வேண்டாம் எனக் கோரி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-இ)

### வெளிநாட்டு...

இழந்துள்ளனரென பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால்தல்துவ தெரிவித்துள்ளார். பொலிஸாரிடம் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடுகளின் அடிப்படையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்திலேயே கூடுதலானோர் பணத்தை இழந்துள்ளனர். இந்த வருடம் செப்ரெம்பர் மாதம் வரை அங்கு 186.7 மில்லியன் ரூபா மோசடி செய்யப்பட்டுள்ளது.

மன்னாரில் 87 மில்லியன் ரூபாவும், முல்லைத்தீவில் 46.5 மில்லியன் ரூபாவும் மோசடி முகவர்களால் மக்கள் பணத்தைப் பறிகொடுத்துள்ளனர்.

யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி மாவட்டங்களில் இழக்கப்பட்ட பணம் தொடர்பில் பொலிஸ் பேச்சாளர் எதையும் குறிப்பிடவில்லை. (அ-ஒ-6)

### இன்று...

எதிர்வரும் [illegible]ஆம் திகதி வரை தொடரும் என யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புவியியற்றுறையின் தலைவரும், வானிலையாளருமான நாகமுத்து பிரதீபராஜா நேற்று ஞாயிற்றுக்கிழமை தெரிவித்துள்ளார்.

தென் கிழக்கு வங்காள விரிகுடாவில் காணப்படும் காற்றுச் சுழற்சி இன்று காலை காற்றமுத்த தாழ்வு நிலையாக மாறும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது நாளை ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு நிலையாக மாறி மேற்கு வடமேற்குத் திசை நோக்கி நகரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இது எதிர்வரும் 17ஆம் அல்லது 18ஆம் திகதிகளில் தமிழ்நாட்டின் வட பகுதிக்கும் ஆந்திராவின் தெற்கு பகுதிக்கும் இடையில் ஆழ்ந்த காற்றமுத்தத் தாழ்வு மண்டலமாக கரையைக் கடக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதேவேளை எதிர்வரும் 22ஆம் திகதி அன்றும் வங்காள விரிகுடாவில் மீண்டும் ஒரு தாழமுக்கம் உருவாகும் வாய்ப்புள்ளது - என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-ஒ-20-66)

### சீரற்ற...

அத்துடன் இருவர் உயிரிழந்துள்ளதுடன், இருவர் காயமடைந்தும் உள்ளனர். கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களிலேயே பெருமளவானோர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-இ)

### வடக்கு...

2024ஆம் ஆண்டு நாடாளுமன்ற பொதுத்தேர்தலில் போட்டியிடுகின்ற தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர்களின் ஒன்றுகூடலொன்று தலவத்துகொட கிறேண்ட் மொனார்க் ஹோட்டலில் நேற்று நடைபெற்றது. இதன்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கின் முக்கியமான அரசியல் தலைவர் ஒருவரைச் சந்தித்த போது, வடக்கு மக்கள் எம்முடன் இணைந்து செயற்படத் தயாராக உள்ளதாகத் தெரிவித்தார்.

நாடாளுமன்றம் வலுவான பிரதிநிதித்துவத்தையும் பண்புகளையும் கொண்டிருக்க வேண்டும். ஆயினும், நாடாளுமன்றம் மக்களின் சொத்துகளை வீணடிக்கும் இடமாக முத்திரை குத்தப்பட்டுள்ளது.

எனவே நாட்டுக்காக சில தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான பலமான அரசியல் பலத்தை நவம்பர் 14ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் பெறவேண்டும் - என்றார். (அ-ஒ-இ)

### கொள்வனவு...

பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 161 ரூபா முதல் 263 ரூபா வரை செலுத்தியே, நப்தா ஒயிலைக் கொள்வனவு செய்துள்ளது. இதனால் மின்சாரசபைக்கு 17.2 பில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது. இந்த நட்டம் 3 சதவீத மின்கட்டண அதிகரிப்பாக பொதுமக்களின் தலையில் சுமத்தப்பட்டுள்ளதாக மின்சாரசபை உயர் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். (அ-ஒ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈ.பி.டி.பி. கட்சியில் இரண்டு பிக்குகள்

முன்னாள் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி, இரண்டு பௌத்த பிக்குகளை தேர்தலில் களமிறக்கியுள்ளது. இதன்மூலம் பௌத்த பிக்குகளைக் களமிறக்கிய முதல் தமிழ்க் கட்சியாக, அந்தக் கட்சி விளங்குகின்றது. தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்காக அவர்கள் களமிறக்கப்பட்டுள்ளதாகக் கட்சி தெரிவித்துள்ளது. (ச)

பதிவுகள் ஆரம்பமாகிவிட்டன
அமெரிக்க லொத்தர் இலவச விசா
காத்திருக்காமல் உடனே பதியுங்கள்
2026ல் நீங்களும் அமெரிக்காவில்
18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்
இந்த வருடம் எடுக்கிறவர்களும் விண்ணப்பிக்கலாம்
A/L
V2 Travels
0768226244

## காணி விற்பனைக்கு உண்டு

- யாழ்ப்பாணம் கைதடியில் 30 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு A9 வீதி முகப்புடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- பார்வையிடும் நேரம் காலை 6.00 - மாலை 6.00
- தரகர் தேவையில்லை
- 20 அடி பாதையுடன்

தொடர்புகளுக்கு:
070 168 3354, 070 668 3354

## Techna
Technical Institute

077 170 3549 வீரசிங்கம் மண்டபம், 3ஆம் மாடி, யாழ்ப்பாணம்.


A/L தொழினுட்பப்பிரிவு

## விசேட செயலமர்வு - 2024

| | |
|---|---|
| தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம் | 19, 20 OCT 8.00am - 3.00pm |
| உயிர் முறைமைகள் தொழினுட்பவியல் பொறியியல் தொழினுட்பவியல் | 26, 27 OCT 8.00am - 3.00pm |
| ICT, விவசாய விஞ்ஞானம் புவியியல், கணிதம் | 01, 02, 03 OCT 8.00am - 3.00pm |

அனுமதிகளுக்கு 15/10/2024 முன் முற்பதிவுகளை நேரடியாக அலுவலகத்தில் மேற்கொள்ளவும்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மலர்வு 04 10 1936

உதிர்வு 16 09 2024

## அமரர் வீரகத்தி நடராசா

(ஓய்வு பெற்ற பிரதி அதிபர் மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம்)

கடந்த 16-09-2024 அன்று இறைபதம் எய்திய அமரர் வீரகத்தி நடராசா அவர்களின் 31 ஆம் நாள் அந்தியேட்டி கிரியைகள், ஆத்மசாந்தி பிரார்த்தனையும் நாளை மறுதினம் (16-10-2024) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வுகளிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் இணைந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தந்தையின் மரணச் செய்தி கேட்டு நாம் துயருற்று இருந்தவேளை நேரில் வந்தும், தொலைபேசி ஊடாகவும், சமூக வலைத்தளங்கள் ஊடாகவும் எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிகள், மலர்வளையங்கள், மலர்மாலைகள் சாத்தியவர்களுக்கும், இறுதிக்கிரியைகளில் பங்குபற்றிய உற்றார், உறவினர், அயலவர்கள், நண்பர்கள் மற்றும் ஊரவருக்கும் இன்றுவரை எமக்கு சகல உதவிகளையும் செய்த அன்பு நெஞ்சங்களுக்கும் எங்கள் குடும்பத்தின் சார்பில் மனமார்ந்த நன்றிதனைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

காளியாமூலை வீதி,
நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.

(cs 56488) (N-1)

குடும்பத்தினர்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



கடந்த 14.09.2024 சனிக்கிழமை இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவி

அமரர் திருமதி

## ஸ்ரீமதி துரைரத்தினம்

தோற்றம் 26.01.1943

மறைவு 14.09.2024

திதி: ஏகாதசி

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்றுமுன்தினம் (12.10.2024) சனிக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (14.10.2024) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

எமது குலவிளக்கு மறைந்த செய்திகேட்டு நாம் துயருற்றிருந்த வேளையில் சகல விதத்திலும் உதவிகள் புரிந்தவர்களுக்கும், நேரிலும் தொலைபேசி வாயிலாகவும் அனுதாபம் தெரிவித்தோர், மலர் வளையம் வைத்தோர், கண்ணீர் அஞ்சலிப் பதாதைகள் வைத்தோர், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது குடும்பத்தினர் சார்பாக மனதார நன்றியினை தெரிவித்துக்கொள்கின்றோம்.

கந்தையா வீதி,
சாவகச்சேரி,

குடும்பத்தினர்

(cr.43411) (N-1)

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 14.10.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org